நாள். 10.12.2024

STC No. 120/2021

எ.ம.சா. 1

திரு. முருகேசன்

த/பெ. ராமசாமிகவுண்டர்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கின் எதிரி ஆவேன். நான் பெருந்துறை, விஜயமங்கலம் பக்கத்திலுள்ள உத்திரிக்கவுண்டர் பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்ரீ ராஜ கணபதி அன்கோ என்ற பைனான்சில் ஒரு பங்குதாரர் என்றால் சரிதான். நான் 2007– 2017 வரையிலான காலகட்டத்தில் வரவு செலவு கணக்கிற்காக வேண்டி பைனான்சில் வழக்கு காசோலை உள்ளிட்ட இரண்டு காசோலைகள், கடனுறுதிசீட்டை கொடுத்திருந்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பைனான்சில் மற்றொரு பாட்னராக மாரப்பனிடம் தான் வழக்கு காசோலை உள்ளிட்ட இரண்டு காசோலைகளை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். நான் பைனான்சில் ஒரு பாட்னராக இருந்தேன். அதேபோல் பைனான்சில் வரவு செலவும் வைத்திருந்தேன். ஆனால் பைனான்சிற்கு காசோலை கொடுக்கவில்லை. மாறப்பனிடம் தனிப்பட்ட முறையில் காசோலையை கொடுத்திருந்தேன். நான் முதல் விசாரணையில் ராஜகணபதி அன்கோ பைனான்சில் கொடுத்திருந்ததாக சாட்சியமளித்துவிட்டு தற்போது மாரப்பனிடம் கொடுத்ததாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் இரண்டு காசோலைகள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டை பைனான்சில் கொடுத்திருந்த நிலையில் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பைசல் பேசி தீர்த்த சமயத்தில் வெள்ளிக்கிழமை என்பதால் தேடி தருவதாக சொன்னநிலையில் தேடி தந்துவிடுார் என்ற நம்பிக்கையின் பெயரில்கூறியுள்ளேன். வழக்கு காசோலையை திரும்ப கொடுக்கமாறு மாறப்பனிடம் எந்தெந்த தேதிகளில் கேட்டேன் என்பது நினைவில்லை., பலமுறை அவரிடம் காசோலையை தந்துவிடுமாறு கூறினேன். ஆனால் தரவில்லை. நான் ஆவணப்பூர்வமாக பைனான்சில் கூட்டாளியாக 2015 ல் விலகினேன். ஆனால் நடப்பில் வரவு செலவு கணக்குகளை 2017 ல் தான்

முடித்துவிட்டு வெளியே வந்தேன்.

3. நான் புகார் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சட்ட அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அதனை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். 2021 ல் தான் புகார் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். காசோலையை மாரப்பன் திரும்ப தராததது குறித்து நான் சட்ட நடவடிக்கை எடுத்தேனா? என்றால் இல்லை. புகார்தாரரமிடருந்து சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டாவது காசோலையை பைனான்சில் கொடுத்திருந்தாக பதிலறிவிப்பு அனுப்பினேனா? என்றால் சதிஷ்குமார் என்று யாரையும் எனக்கு தெரியாது. அதனால் நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.4 செல்லாத ஒன்று என்றால் சரியல்ல. நான் காசோலைகளை மாறப்பனிடம் கொடுத்திருக்கும் நிலையில் அதனை திரும்ப பெற சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், சதிஷ்குமார் என்பவர் தாக்கல் செய்த காசோலை வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி காசோலையை எனது பாட்னர்களில் ஒருவரான மாறப்பனிடம் கொடுத்தாக உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சதிஷ்குமாரிடம் பெற்ற சட்டப்பூர்வ கடனுக்காக வேண்டி கொடுக்கப்பட்ட காசோலை தான் வழக்கு காசோலை என்றால் சரியல்ல. நான் வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துவிட்டு வழக்கிற்காக வேண்டி மாறப்பனிடம் கொடுத்தாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.